<u>DEPOSITION OF WITNESS</u>

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

Case No. : D. V. C. No. 6/2024

Prosecution Witness : P. W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : சோனியா | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 24/11/2025

Respondent Present.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

பொருளாதார உதவி பரிகாரங்கள் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். கணவர் வீட்டில் எந்தெந்த தேதி மற்றும் நேரங்களில் எனக்கு குடும்ப வன்முறை நிகழ்ந்தது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான். எதிர்மனுதாரர் தான் திருமணத்திற்கு அனைத்து செலவுகளும் செய்தார் என்றால் சரிதான். ஆனால் என்னுடைய புகார் மனுவில் ரூ.20 லட்சம் திருமண செலவு நாங்கள் செய்தோம் என்று சொல்லியிருப்பது பொய்யா என்றால், திருமண செலவு எதிர்மனுதாரர் தான் செய்தார், எனக்கு நகைகள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கு எனது வீட்டில் ரூ.20 லட்சம் செலவு செய்தார்கள். என் தாயார் வீட்டு வேலை செய்து தான் எங்களை காப்பாற்றினார் என்று சொல்லும் போது, ரூ.20 லட்சம் எனக்காக செலவு செய்தார்கள் என்பது பொய்யானது என்றால், சரியல்ல. நானும் எதிர்மனுதாரர் குடும்பமும் உறவினர்கள் என்பதாலும், 1ம் எதிர்மனுதாரரான எனது கணவர் லோகேஷுக்கு 6ம் வகுப்பு படிக்கும் போது ஏற்பட்ட சாலை விபத்தில் காது

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2025.11.24 16:54:25 +0530

கேளாமல் போனது பற்றிய விவரம் எனக்கு நன்கு தெரிந்தே நான் அவரை திருமணம் செய்து கொண்டு தற்போது வழக்கிற்காக காது கேளாததை மறைத்துவிட்டார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

காது கேளாததால் 1ம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு பின்னர் வேலைக்கு செல்லாமல் இருந்தார் என்று, பிரமாணத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால், சரிதான். திருமண சமயத்தில் எனக்கு எங்கள் வீட்டில் 40 சவரன் நகை மற்றும் 2 கிலோ வெள்ளி கொடுத்தார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள நகைகள் குறித்த ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றாலும், அதனால் தான் அதில் என் பெயரும், தாயார் பெயரும் இடம்பெறவில்லை என்றாலும் சரியல்ல. என் அக்கா தான் நகை வாங்க எனக்காக சென்றார். அதனால் அவர் பெயர் மட்டும் உள்ளது. மசா.ஆ.8 ரசீதுகள் அனைத்தும் நான் நகல்கள் தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். அவை அனைத்தும் எஸ்டிமேட் பில்கள் என்று தான் உள்ளது என்றால், சில ரசீதுகளில் Item Delivered என்று உள்ளது.

இதுநாள் வரை என் கணவருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று சொல்லி வரும் நான் அவர் மீது நான் விவகாரத்து கேட்டு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால், பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் மனு எண்.274/2025 நவம்பர் 2025ல் தாக்கல் செய்திருக்கிறேன். பிரமாணத்தில் இந்த விவரத்தினை சொல்லவில்லை என்றால், பிரமாணம் தாக்கல் செய்த பின்பு தான் அவர் மீது விவகாரத்து வழக்கு போட்டிருக்கிறேன். 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் என்னை தங்கள் வீட்டு பெண் போல் நடத்தி வந்த நிலையில், நான் அவர்கள் மீது வீண் பொய்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2025.11.24 16:54:35 +0530

புகார் கொடுத்திருக்கிறேன் என்றால், சரியல்ல.

எனக்கு திருமண சமயத்தில் போட்ட நகைகள் அனைத்தும் என் வசம் என் பெற்றோர் வீட்டில் வைத்திருக்கிறேன் என்றால், சரியல்ல. அவற்றை நான் தற்போது எதிர்மனுதாரர் தான் வைத்திருக்கிறார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. பாபு மற்றும் அலமாதி பலராமன் என்பவர்கள் முன்னிலையில் நடைபெற்ற பஞ்சாயத்தில் நகைகள் அனைத்தும் எங்கள் வசம் தான் இருக்கிறது என்று சொல்லிவிட்டு தற்போது எதிர்மனுதாரர் தான் நகைகளை வைத்திருக்கிறார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் மீது தொடர்ந்து நான் பல பொய் புகார் கொடுத்து அந்த பொய் புகார் விசாரணை அனைத்திலும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகி நான் பொய் புகார் அளித்த காரணத்தால் விசாரணைக்கு ஆஜராக தவறி இருக்கிறேன் என்றால், சரியல்ல. அனைத்து விசாரணைக்கு ஆஜராகி இருக்கிறேன். நான் சொல்வது போல் எந்த குடும்ப வன்முறையும் நிகழவில்லை என்றாலும், நான் பொய்யான சங்கதிகள் கூறி மனு தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2025.11.24 16:54:46 +0530